உ

சிவமயம்

பார்வதிக்கு பரமசிவனுபதேசித்த

வைத்திய அரிச்சுவடி.

இரண்டாம்பாகம்

காலஞ்சென்ற

சூளை-முனுசாமிமுதலியார் பாரியாள்

அம்மணி அம்மாள்

சகல சுதந்தரமும் பெற்றுக்கொண்டு

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை] 1927. [அணா 4

உ

கடவுள் துணை.

பரமசிவன் பார்வதிக் குபதேசித்த

வயித்திய அரிச்சுவடி.

இரண்டாம் பாகம்.

இஃது
சேழுமண வைத்திய சித்திரக்கவி
தேவேந்திரநாதர் பண்டிதரவர்களால்
பலகைமுறையாக வழங்கினதையும்
எட்டுப்பிரதியிலிருந்ததையும்
பிழையறப் பரிசோதித்தும்
வெனது கைமுறைகளையும்
சேர்த்து நூதனமாக
இயற்றப்பட்டது.

காலஞ்சென்ற
ஜூனே-முனிசாமிமுதலியார் பாரியாள்
அம்மணி அம்மாள்
சகல சுதந்திரத்துடன் பெற்றுக் கொண்டு

சென்னை-ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.
இதன் விலை] ௵ 1926. [அணா 4

ரிஜிஸ்டர் காபி ரைட்.

உ

கடவுள் துணை.

பரமசிவன் பார்வதிக் குபதேசித்த

வயித்திய அரிச்சுவடி.

இரண்டாம் பாகம்.

விநாயகர் துதி காப்பு.

பூரணமாய்ப் பலர்முன்னம் போற்றிடும்
ஆரணத்திலமர்ந்த வஸ்த்துவாய்
காரணமாய்ச் சமைந்தநற் கற்பக
வாரண முகன்பாதங் காப்பதே.

இந்நூலின் கருத்து.

முன்னமே பரமசிவன் பார்வதிக்
குன்னகமா யுபதேசம் செய்தருள்
நன்னய வயித்திய அரிச்சுவடி
தன்னையேபாங்கு சாற்றப்படுவதே.

நக்ஷத்திர வகுப்பு.

சுரமுதித்த நக்ஷத்திரங்களின் சாந்தி.

ஆவதோ ரஸ்வனிபாலன் றுதித்திடுஞ்சுரம்
போவதும்பத்து நாளினிற்போகாவிடிற் சாந்தியும்
யீவ நவதானிய மிவன்றலைபைசுற்றியே
போவதர்க்குவைத்திடக் குணமாகிடும் கொள்கையே

இ-ள். சுரமானது அஸ்வனி நக்ஷத்திரத்தில் உதிக்குமாகில் அச்சுரம் பத்து நாளேயில் தீரும் அப்படி தீராவிடில் அதற்கு சாந்தியாவது நவதானியத்தைக் கொண்டுவந்து சுரங்கண்டவன் தலையைச்சுற்றி அந்த நவதானியத்தை பசுவிர்க்கு வைத்துவிட்டு யெந்த மருந்தை கொடுத்தபோதிலும் சுரம் நீங்கிவிடும் எ-று.

பரணி நக்ஷத்திரத்திர்க்கு சாந்தி.

பரணியிற்சுரமுதிக்கப் பாரைந்து நாளில்விடும்
விரவியே விடாதகாலமென்னும் சோறும் சுற்றியே
நிர்வியுமூர்மேற்கினில் நிலக்கநாலுசந்தியில்
பரவவைத்திடவங்கே பரந்துபோகும் நோயதே.

இ-ள். சுரமானது பரணி நக்ஷத்திரத்தில் உதிக்குமாகில் அது ஐந்து நாளில் நின்றுவிடும் அப்படி சுரம் விடாவிடில் அதற்குச் சாந்தியானது யெள்ளும் சாதமும் பிசைந்து வியாதியஸ்த்தன் தலையைச்சுற்றி ஊருக்குமேர்க்கே நாலு சந்தும் கூடு மிடத்தில் சாதத்தை வைத்துவிட்டு வரவும் அச்சுரமானது நீங்கும் எ-று.

கிருத்திகை நக்ஷத்திரத்தின் சாந்தி.

கிருத்திகைக்கு சுரமுந்தோன்றில் கேளிருபத்தொன்றில், பொருத்தமாக நிர்ப்பது போகாவிடில் நெய்யும் சோர், உருத்தமாக சுற்றியே யவ்வூரக்கினி மூலையில், திருத்தமாக வைத்திடவும் தீரும்சுரமங்கனே.

இ-ள். சுரமானது கிருத்திகை நக்ஷத்திரத்தில் உதிக்குமாகில் அது யிருபத்தோர் நாளில் நின்றுவிடும் அப்படி யகலாவிடில் அதர்க்கு சாந்தியாவது. நெய்யும் சோறும் பிசைந்து வியாதி யஸ்த்தன் தலையைச் சுற்றி

அக்கினி மூலையின் வெளி புரத்தில் வைக்கவும் சுரம்நின்றுவிடும் எ-று.

ரோகணி நக்ஷத்திரத்தின் குணமும் சாந்தியும்.

மந்தமாகும்வாய்பினத்தும் வாந்திசெய்திருமிடும்
சந்ததம்விம்மிடும் சளிபிரங்கும்போதினில்
குந்திவாய்குமட்டும் தேகம்கொப்பளிக்கும் காய்ந்திடும்
தெர்ந்தவாய்வுபரியுஞ் சுருண்டிடும்சொரியுமே.
பார்க்கமார்வயற்றினிற்கும் பாரைபாச்சிறைப்போல
கோர்க்கவேகண்டம் பிடரிருக்குந்திமிராயோரிடும்
யேர்க்கவேபதினோர்நாளி லேகிடுமேகாவிடின்
தீர்க்கமாய்பால்சோரு சுற்றிச்சேருமூர்நடுவிலே

இ-ள். சுரமானது ரோகணி நக்ஷத்திரத்தில் உதிக்குமாயின் அதின் குணம் யாதெனில் மந்தப்படும் வாய் பினத்தும் வாந்திகாணும்பிருமலிடும் மலங்கழியும் சலம் அதிகமாயிரங்கும் வாய்குமட்டும் திரேகம் கொப்பளிக்கும் சுரங்காயும் வாய்வு புரியும் சுருண்டு படுப்பார் இளைவுண்டாகும் மார்புக்கும் வயற்றுக்கும் பாரை பாச்சிறைப்போலிருக்கும் கண்டத்திர்க்கும பிடரிக்கும் திமிர் பற்றியிருக்கும் அந்தசுரம் பதினோர் நாளையில் விடும் அப்படி விடாமற்காயுமாகில் அதற்கு சாந்தி. சாதத்தில் பால் விட்டுப்பிசைந்து வியாதி யஸ்தர் தலையைச்சுற்றி ஊருக்கு நடுமையத்தில் வைத்து விடவும் அக்கொடிய சுரமானது நீங்கும். அப்படி செய்யாவிடில் துன்பப்படுத்தும் எ-று.

மிருகசீரிடம் நக்ஷத்திரத்திர்க்கு சாந்தி.

மிருகசீரிடசுரம் விலகுமார்நாளொன்பதில்
வெருவவேங்காவிடில் வெள்ளைப்பூஉளுந்துமே

சிரம்சுற்றிப்பெருமாட்கோயில் சேரமுன்னேவைத்திட
மருவவச்சுரமகன்று மாரியோடும்காண்பீரே.

இ-ள் சுரமானது மிருகசீரிட நக்ஷத்திரத்தில் உதிக்குமாகில் அவை ஆறுநாளில் அல்லது ஒன்பது நாளில்விட்டுவிடும். அப்படி நீங்காவிடில், அதற்குச்சாந்தியாவது. வெள்ளைப்பூவும் உளுந்தும் கொண்டுவந்து அவாள் தலையைச்சுற்றி பெருமாள்கோவில்முன்னே வைத்துவிடவும அப்போது அந்தசுரமானது நீங்கிவிடும் அப்படி செய்யாவிடில் கஷ்டமுண்டாகும்

திருவாதிரையின் நக்ஷத்திர சாந்தி.

ஆதிரையிற் காண்சுரமு மைந்துநாளையில்விடும்
வாதித்துவிடாதாகில் மரணமிருபத்தைந்தில்
வேதித்தப்புதன்விழயாம் வெள்ளிசனியின்பகல்
ஓதியேபரமானமுடையார் கோயில்முன்வையே.

இ-ள். சுரமானது திருவதிரை நக்ஷத்திரத்தில் உதிக்குமாகில் அதுஐந்து நாளையில்விடும். அப்படி விடாதாகில் அவாள் யிருபந்தைந்து நாளையில் மரணமடைவார் அதற்குசாந்தியாவது. புதன் வியாழம் வெள்ளி-சனி யிந்நான்குநாளை பகலில் மந்திரம் செபித்துபரமானத்தை அவாள் தலையைச்சுற்றி உடையவர் கோயில் முன்பாகவைக்கவும் சுரம் நின்றுவிடும் எ-று.

புனர்பூச நட்சத்திரத்திற்கு சாந்தி.

புனர்பூசமுதித்தக்காய்ச்சல் போகுமூனுநாள்நல்லது
தனித்திருபத்தோர்நாளிற்றுன் விலகிப்போவாதேல்
முனிந்துமெகாயமுஞ்சோரு முன்பெருமாள் கோயிலில்
கனிந்துமேவைக்கச்சுரம் காணுதோடுங்காணமே.

இ-ள். சுரமானது புனர்ப்பூச நக்ஷத்திரத்தில் உதிக்குமாயின் அவை மூன்றுநாள் அல்லது யிருபத்தோர்நாளில் விலகிவிடும் அப்படிவிலகாவிடின் அதற்கு சாந்தியாவது. பெருங்காயமும் சாதமும்பிசைந்து பெருமாள்கோயிலின்முன் காச்சலுடையோன் தலையைச்சுற்றி கோவிலின் மூன்பாகவைக்கவும், உடனே சுரம் நின்றுவிடும் அப்படி செய்யாவிடில் துன்பமுண்டாகும் எ-று.

பூசநக்ஷத்திரத்திற்கு சாந்தி

பூசத்திலுதித்தசுரம் போகாதேல் பொல்லாங்கில்லை
நேசத்திலுதித்தபோதே நெட்டாமலேநின்றிடும்
பாசத்திலுதிர்த்ததற்குப் பாங்கொன்றும் சாந்தியாலே
தேசத்திலுத்தநோய்க்கு சேதமில்லைதீருமே.

இ-ள். சுரமானது பூச நக்ஷத்திரத்தில் உதிக்குமாயின் அவை உடனே நீங்காவிடினும் அதிலொன்றும் பொல்லாங்கில்லை நெடுநாள் செல்லாமலும் விலகிவிடும் அந்த சுரத்துக்கு சாந்தி செய்வதுமில்லை அது யெளிதில் யாதொரு சேதமுமில்லாமல் அகன்றுவிடும் அதின் விஷயத்தில் சந்தேகமில்லை எ-று.

ஆயில்ய நக்ஷத்திரத்தின் சாந்தி.

ஆயிலியத்திலுதித்தவச் சுரமற்றுநாள்
போயிடாதுமூவார்நாளிற் புகழ்பெற்றின்றிடும்
தாயிருந்திடும்புத்தின்மேற் றூன்வார்க்கபாணகம்பால்
நோயதுவகற்றிடும் நுணுக்கமானது நுட்பமே

இ-ள். சுரமானது ஆயில்ய நக்ஷத்திரத்தில் உதிக்குமாயின் சுரம் மற்றுநாள் நின்றுவிடும் அப்படி நிற்காவிடில் பின்னும் பதினெட்டாநாளில் நின்றுவிடும அ

திலும் நிர்க்காவிடில் மாரியம்மன் ஆலயத்திலுள்ள புத் தின்மேல் பாணகம் பாலும் வியாதியஸ்தர் தலையைச் சுற்றி புற்றின்மேல் வார்க்கவும் சுரம் வெளிதல் நின்று விடும் எ-று.

மகநக்ஷத்திரத்தின் சாந்தி.

மகத்தினிலுதித்திடும் சுரம்மாருமீரார்நாளில்
மிகத்தினிற்றீறும்தீரா திரண்டுமாதத்தில்விடும் [வை
அகத்தினிலேவெள்ளும்சாதம் அவரைசுற்றிச்சுடலை
சகத்தினிலேயச்சுரமுந் தாண்டியோடும்ஜன்னியே.

இ-ள். சுரமானது மக நக்ஷத்திரத்தில் உதிக்குமாயின் அவை ஆறுநாளில் அல்லது பனிரெண்டு நாளில நின்று விடும் அப்படி சுரம் விடாவிட்டால் யிரண்டு மாதத்தில் நின்றுவிடும்அதிலும் விடாதசுரத்துக்கு சாரதிபென்னும சாதமும் பிசைத்து அவாள் தலையைசுற்றி கடற்கரை யில் வைக்கவும் சுரம் நின்றுவிடும் எ-று.

பூரநக்ஷத்திரத்திற்கு சாந்தி.

பூரத்திலுதித்தசுரம்போகும் நாள்பதினொன்றில்
பாரதில்விடாதால் சிற்பருப்பும்சோரும்சுற்றியே
கோரதிற்பிடாரிகோயிற் கொண்டுபோய்முன் வைக்க
சீரதாய்சுரம்தீர்ந்து செம்மையாகுந்திண்ணமே.

இ-ள். சுரமானது பூர நக்ஷத்திரத்தில் உதிக்குமா யின் அவை ஒன்பதுநாளையில் தீரும் அப்படி தீரா விடில் அதர்க்குச் சாந்தியாவது சாதத்தில் தேன் விட்டு ப்பிசைந்து அவாள் தலையைச்சுறறிக் சிதேவியார்கோவி வில் முன்னே வைக்கவும் உடனே சுரம் நீங்கிவிடும் அப் படி செய்யாவிடிற் குற்றம் சேரிடும் எ-று.

அஸ்த்த நக்ஷத்திரத்தின் சாந்தி.

அஸ்த்தத்திலுதித்தசுரம் மகலுமேமூணுநாளில்
முத்தத்தில்விடாதாகில் முறையாய்ப்பாலும்சோருமே
மொத்தத்திற்றலையைச்சுற்றி முன்னம்தூர்க்கைகோயி
லைத்திடசுரமும் தீர்ந்து மாரியோடுமவைத்ததே.

இ-ள். சுரமானது அஸ்த்தநக்ஷத்திரத்தில் உதிக்குமா அவை மூன்றுநாளில் விட்டு விடும் அப்படி விடாமல் பிடிக்குமாகில் அதற்கு சாந்தியாவது பாலும் சோறும் பிசைந்து வியாதியஸ்தர் தலையைச்சுற்றி தூர்க்கை யம்மன் கோயிலண்டை வைக்கவும் உடனே சுரம் நின்று விடும் எ-று.

சித்திரை நக்ஷத்திரத்திற்க்கு சாந்தி

சித்திரையினிலுதித்தச் சீதசுரம்நாளெட்டில்
நித்திரைபானிலேநிற்கும் நிர்க்காவிடிலங்ஙனே
வஸ்த்திரமுஞ்சோருகிரி வைத்துதலைசுற்றியே
சித்திரமெழுதுக்கூடத்தினில் வைக்கத்தீருமே.

இ-ள். சுரமானது சித்திரை நக்ஷத்திரத்தில் உதிக்குமாயின் அவை யெட்டு நாளில் தூங்கி யெழுந்தாற்போல அகன்றுவிடும்அப்படியகலாவிடில் அதற்கு சாந்தியாவது கோடி வஸ்த்திரமும் சாதமும் கரியும் ஒரேதினத்தில் வைத்து அவாள் தலையைச்சுற்றி சித்திரங்களெழுதிய கூடத்தில் வைக்கவும் உடனே சுரமகலும் எ-று.

சுவாதி நக்ஷத்திரத்திற்க்கு சாந்தி.

சுவாதியிலுதித்தசுரம் சோருபத்துநாளையில்
அலாவதிற்றீருவிடிலதற்குச் சோரிலைக்கரி

திவாகியாய்த்தலையைச்சுற்றி நெட்டிச்சுடுகாட்டினில்
திவாகரனெதிரில்வைக்கத் தீரும்சுரம்சென்றுமே.

இ-ள் சுரமானது சுவாதி நக்ஷத்திரத்திலுதிக்குமாகில் அவை பத்துநாளையிற்றீரும் அப்படி தீராவிடில் அதற்கு சாந்தியாவது சாதத்துடன் கீரைகடைந்து கரிபதார்த்தங்கள் வைத்து அவாள் தலையைச்சுற்றி சுடுகாட்டில் சூரியன் முன்பாக வைத்துவிடவும் சுரமகலும் அப்படி செய்யாவிடில் துன்பம் எ-று.

விசாக நக்ஷத்திரத்திற்கு சாந்தி.

விசாகத்திலுதித்தசுரமே யிருபத்தொன்றினில
பசாசாகவிடும்விடாதேல் பாரிரைச்சிசோருமே
திசாதிசையிற்புன்னை மரத்தின்கீழதைவைத்திட
விசாகிசஞ்சுரம்தீர்ந்து நெட்டியோடுங்காணவே.

இ-ள். சுரமானது விசாக நக்ஷத்திரத்தில் உதிக்குமாகில் அவை யிருபத்தோர்நாளில் சுரம் விட்டுவிடும் அப்படி நீங்காவிடில் அதற்கு சாந்தியாவது சாதமும் பிரச்சியும் சமைத்து வைத்து அவாள் தலையைச்சுற்றி புன்னை மரத்தின்கீழ் வைக்கவும்சுரமகலும் அப்படி செய்யாவிடில் சுரமகலாது எ-று.

அனுஷ நக்ஷத்திரத்திற்கு சாந்தி.

அனுஷத்திற்சுரயதோன்றி லதற்கொருபயமிலை
மனதிற்கேற்றசாந்தியொன்று வைப்பதுவுமங்கிலை
தனதுநாட்கெடுவுஞ் சாற்றுதற்குமொன்றினை
யினமரிந்தளிக்க மருந்தேகிடும்விரைவிலே

இ-ள். சுரமானது அனுஷநக்ஷத்திரத்தில் உதிக்குமாயின் அச்சுரத்தினால் அபாயமொன்றில்லை அதற்குசாந்தியு

மில்லை அதர்க்கு கெடுவுமில்லை அதற்குத்தக்க அவிழ்த மீய சுரம் நீங்கிவிடும் எ-று.

கேட்டை நக்ஷத்திரத்திர்க்கு சாந்தி.

கேட்டையிலுதித்தசுரம் கேட்கப்பதினாவில்
வீட்டைவிட்டேகுமே காதேல்மிக்கபாலும்சோருமே
தேட்டையாகக்கேசஞ்சுற்றித் தேவிதுர்க்கைகோயில்முன்
போட்டையாகிடிற்சுரம் புரண்டோடுமப்பேதமே.

இ-ள். சுரமானதுகேட்டை நக்ஷத்திரத்தில் உதிக்கு மாயின் அவை பதினொருநாளில்விலகும். அப்படி விலகா விடில் பாலும் சாதமும் பிசைந்து அவாள்தலையைசுற்றி துற்கைகோயில் முன் வைக்கவும் உடனே சுரம் நீங்கி விடும எ-று.

மூல நக்ஷத்திரத்திற்கு சாந்தி.

மூலத்திற்சுரமும்தோன்றிலோடும் நாட்பதினென்றில்
சீலமாய்மீளுமீளாதேல் சொல்லுமெட்டுமாதத்திற்
கோலமாய்பயரும்சோறும் கொண்டுசமாதியில் வை
ஞாலத்திற்சுரமகன்று நாடாதோடும்நாணவே.

இ-ள். சுரமானது மூல நக்ஷத்திரத்தில் உதிக்குமா யின் அவை பதினொருநாளையில் மீண்டுவிடும் அப்படி மீளாதாகில் யெட்டுமாதத்தில் கொன்றுவிடும் அதற்குச் சாந்தியாவது பயரும்சாதமும் கலந்து அவாள் தலையைச் சுற்றி சமாதியண்டைவைக்கவும் வைத்தவுடனே சுரமக லும் எ-று.

பூராட நக்ஷத்திரத்திற்கு சாந்தி.

பூராடத்துதித்தசுரம் போகுமெட்டுநாளினில்
மாராட்டமாகவிடாதேல் மாபெருமாட் கோயில்முன்

சிராட்டமிடதுபாரிசத்து னின்றுதானமும்
பாராட்டதர்மமளிக்கப் பற்றறும்சுரமதே.

இ-ள். சுரமானது பூராட நக்ஷத்திரத்தில் உதிக்குமா யின் சுரம் யைட்டுநாளையிற்றீறும் அப்படி தீராவிடில் அதர்க்கு சாந்தியாவது பெருமாள் கோவில் முன் பாக வியாதி யஸ்தர் சென்று அக்கோயிலின் இடது பாரிசத் திலிருந்து தானதர்மம் செய்வாராகில் சுரமகளும் அப் படி செய்யாவிடில் சுரம் நீங்காது எ-று.

உத்திராட சுரத்திற்கு சாந்தி.

உத்திராடந்தன்னிலே யுதித்தசுரமங்கனே
தத்திநின்றிரண்டுநாளில் தணிந்திடும்மெளிதினில்
பத்திகொண்டுசாந்திடுசெய்து பாவிப்பதுமொன்றில்லை
சித்தியாகவொத்திடாது தீரும்சுரஞ்சென்றுமே.

இ-ள். சுரமானது உத்ராட நக்ஷத்திரத்தில் உதிக்கு மாயின் அவரை யிரண்டுநாளில் சுகுணப்படும் யிச்சுரத் தால் துன்பமொன்றில்லை யிதற்கு சாந்தியுமில்லை யிச் சுரம் கெடுதலைப்பண்ணுது எ-று.

திருவோண நக்ஷத்திரத்திற்கு சாந்தி

ஓணத்திற்சுரமேதோன்றியொன்றுமேபயமில்லை
ஆனலைமொடுங்கின் றகன்றிடுஞ்சுரமதும்
தோணவேறோர்சாந்திகளுஞ் சூட்டுதற்கிலாமலே
நாணவேயகன்றதும் நடுக்கடலிற்றக்குமே.

இ-ள். சுரமானது திருவோண நக்ஷத்திரத்தில் உதி க்குமாயின் அவையாதொரு துன்பப்படுத்தாது உடனே நின்றுவிடும் அதற்கு யாதொரு சாந்தியும் கிடையாது அதனல் மனக்கவலைப்படலாகாது எ-று.

அபிசித்திக்கு சாந்தி.

அபிசித்தியிற்சுரமணிகி வந்தெதிற்கையில்
விதிகிழிந்துவிட்டதாக நினைப்பதுவுமுண்மையே
ஜெபிக்கவும்கிரகசாந்தி செய்பதேமம்வளர்த்திட
வபிக்கவும்முயிர் முயிர்தரிப்பர் நலமாகவங்கனே.

இ-ள். சுரமானது அபிசித்தி நக்ஷத்திரத்தில் உதிக்குமாயின் அவை தனக்குரிய யெறுத்துக் கிழித்ததாகவே நினைக்கவேண்டுவது நிச்சயம் அதற்கு சாந்தியாவது நவக்கிரக ஜெபம்செய்ய ஓமம் வளர்த்தி வந்திட அப்போதவர் சுரம்நீக்கி பிழைப்பர் அப்படி செய்யா விடில் கட்டாயம் மரணமடைவர் எ-று.

அவிட்ட நக்ஷத்திற்கு சாந்தி.

அவிட்டத்திற்சுரம்வர வகலும்பத்துநாளினில்
தவிர்க்கவே விடாதாகிற் தயிருடன்சாதம்சுத்தியே
குவியவுமாதுலர்க்குக் கொடுத்திடச்சுரமது
புவிக்குளேவிலகியோடும் பொய்யலவிதுண்மையே.

இ-ள். சுரமானது அவிட்ட நக்ஷத்திரல் உதிக்குமாயின் அவை பத்துநாளில் நீங்கிவிடும் அப்படி தீராதாகில் அதற்கு சாந்தியாவது தயிரும் சாதமும் பிசைந்து அவாள் தலைபைச்சுற்றி ஆதுலர்க்கு கொடுத்து விடவும் அப்பொழுதே அந்த சுரமகன்றுவிடும் எ-று.

சதைய நக்ஷத்திரத்தின் சாந்தி.

சதையத்தின்சுரமுதிக்கத் தான்விடும்பதினறில்
வதையதேவிடாததாகில் மரணமுமோராண்டிலே
உதையத்தில்பஞ்சவர்ணம்சோற்றுச்சிதலைசுற்றியே
விதையத்தேற்றிப்பி துலார்க்கிடச்சுரமகலுமே

இ-ள். சுரமானது சதைய நக்ஷத்திரத்தில் உதிக்குமாயின் அவை பதினறுநாளில் நீர்க்கும் அப்படி நீர்க்

காவிட்டால் அதற்கு சாந்தியாவது. சூரிய உதையத்தில் பஞ்சவர்ணசோறு கொண்டுவந்து அவாள் உச்சி உச்சி தலையை சுத்தி ஏற்றிறக்கி ஒருபரதேசிக்கி கொடுத்து விடவும் உடனே சுரமகன்று விடும் எ-று.

பூரட்டாதி நக்ஷத்திரத்திற்கு சாந்தி

பூரட்டாதியிற்சுரமும் போகுமாருநாளினில்
மீரிட்டாய்விடாததாகில் மீராருநாள்விடு
ஓரிட்டாய்பாலும்சோர் பொக்க பிள்ளையார்கோயில்
மாராட்டமில்லாமல்முன்னம் வைக்கசுரம்மாளுமே.

இ-ள் சுரமானதுபூரட்டாதி நக்ஷத்திரத்தில்உதிக்குமாயின் அவை நாலுநாளில் விட்டுவிடும் அப்படி விடாதிருக்குமானுல் அது பனிரெண்டாநாள் விட்டுவிடும் அதிலும் விடாதிருந்தால் அதற்கு சாந்திபாவது பாலும் சோறும் பிசைந்து அவாள் தலையை சுற்றி பிள்ளையார்கோயில் முன் வைக்கவும் உடனே அச்சுரமகன்றுவிடும். எ-று.

உத்திரட்டாதி நக்ஷத்திரத்திற்கு சாந்தி.

உத்திரட்டாதியினியுதித்த சுரமீரெட்டில்
அத்தியேவிடும்விடாதேல் தயிர்சோறும்சுற்றியே
யெற்றயுடையவர் கோயிலேற்றி முன்னம்வைத்திட
மத்தியிற்சுரமதுவும் வாங்கிடும்களறுமே.

இ-ள். சுரமானது உத்திரட்டாதிநக்ஷத்திரத்தில்உதிக்குமாயின் அவைபதினாருநாளில் விட்டாலும் அப்படி விடாது போராடுமாயின் அதற்குசாந்தியாவது தயிரும்சோ

ரும்பிசைந்து தலையைச்சுற்றி உடையவர்கோயில் முன்ன
ம் வைத்து விடவும் அப்போதசுரம் நின்றுவிடும்

இரேவதி நக்ஷத்திரத்திற்கு சாந்தி.

ரேவதியில்நேருஞ்சுரம் னேரியெட்டுநாளினில்
போவதுபோகாவிடிற் பொங்கும்பால்சோர்சுற்றியே
யேவதும் நற்சித்ரயெழிதிய மண்டபத்தில்
ஆவதுமேல்வைத்திட மகலும் சுரமன்றுமே.

இ-ள் சுரமானது இரேவதி நக்ஷத்திரத்திலுதிக்குமாகி
ல் அவையெட்டுநாளில் விட்டுவிடும் அப்படி விடா சுரமா
கில் அதற்குசாந்தி பால்சோர்பொங்கி அவாள் தலையைசு
ற்றி சித்திரங்களெழிதிய மண்டபத்தின் மத்தியில் வைத்
து விட்டு வரவும் சுரம் அப்பொழுதே நீங்கிவிடும்

நக்ஷத்திர வகுப்பு,

முற்றிற்று.

சுத்திவகுப்பு.

சுக்கு சுத்தி

சுக்குயென்பதை தேரினதாயெடுத்து அதின் மேற்
றோல் சீவி அவைகளின்மேல் தாளித்த சுண்ணும்பை மு
ழுதும் பூசி அதை நன்றாய் உலர்த்தி அதைபலமருந்துக
ளுக்குச் சேர்க்கவும்.

திப்பிலி சுத்தி.

திப்பிலி யென்பதை யெலிமிச்சம் பழச்சார் பிழிந்து அதில் ஊரவைத்து யெடுத்து அதை நன்றாய் உலர்த்திய பின் அதனைபல மருந்துகளும் உபயோகிக்கவும்.

ஓமம் சுத்தி.

ஓமம்யென்பதை தாளித்த சுண்ணாம்பு நீரில் தெளுவை யிருத்து ஓமத்தைக்கொட்டி ஒரு ஜாம பரியந்தம் சுண்ணாம்பு நீரில் ஊரப்போட்டு அந்த ஓமத்தையெடுத்து காயவைத்து காய்ந்தபிறகு பலமருந்துகளுக்கும் உபயோகப் படுத்தவும்.

இருசிரகச் சுத்தி

சீரகம் அல்லது கருஞ்சீரகம் யிவ்விரண்டையும் வெவ்வேராய்தண்ணீரில் ஏழுஜாமம் ஊரவைத்து ஓமத்தை உலர்ந்த பின் பலவித அவிழ்தங்களுக்கும் உபயோகப்படுத்தவும்.

அமுக்குரா சுத்தி

அமுக்குராவின் வேரினை பசும்பாலிலவித்து அதை யுலர்த்தி பல அவிழ்தங்களுக்கும் உபயோகப்படுத்தவும் அமுக்கிரா யென்பதற்கு அஸ்வகெந்தி யென்றும் பெயர்.

சிவிதைவேர் சுத்தி.

சிவதைவேர் யென்பதை பசும்பாலில் வேகவைத்து யெடுத்துக்கொண்டு பல அவிழ்தங்களுக்கும் சேர்க்கவும் யிச்சுவிதைவேர் விரோசனமுண்டாக்கும்யிதுவொரு விஷ மருந்தாம்

ஊமத்தைவிரைசுத்தி

ஊமத்தை விரைய வேண்டியவரையிற்கொண்டு வந்து நல்ல ஜலத்தில் ஊரப்போட்டுயெடுத்து உலர்த்தி பல அமிழ்தங்களுக்கும் சேர்க்கவும் யிதுவும் ஓர் விஷமருந்து

செங்கோட்டை சுத்தி.

செங்கோட்டை வேணவரையில் கொண்டுவந்து தண்ணீரிலூரவைத்து மற்றுநாள் அவைகளின் மூக்குகளை அரிந்துப்போட்டு உலர்த்தியபின் பலமருந்துகளுக்கும் உபயோகப் படுத்தவும் அதின் புகை பட்டவுடன் உடம் பூதும்

எட்டிக்கொட்டை சுத்தி.

எட்டிக்கொட்டையை வேண்டியவரையில் வெள்ளுடன் வேகவைத்து மருபடியும் சிருகீரைசாற்றில்ஊரவைத்து மருபடியும் தேற்றாங்கொட்டை ரசத்தில் பெரித்தெடுத்து பலவித அவிழ்தங்களுக்கும் சேர்க்கவும் நல்ல சுத்தி ஆனால் யிது போதை வஸ்த்துவாம்.

கொம்பரக்கு சுத்தி.

கொம்பரக்கு வேணவரையில் கொண்டுவந்து தண்ணீரிற்போட்டு அடுப்பேற்றி யெறித்து யிரக்கி ஆரவைத்தெடுத்து மருபடியும் யிரண்டாவது விசையெரித்து மருபடியும் யிரக்கி ஆரவைத்து உலர்த்தியபின் பலமருந்துகளுக்கும் உபயோகப்படுத்தவும்.

மாசிக்காய் சுத்தி.

மாசிக்காயென்பதை பசுநெய்யில்வருத்து அன்றிரவில் வைத்து மருதினமெடுத்து அதை பலமருந்துகளுக்கும்

சேர்க்கவும் யிதைப்போலவே ஜாதிக்காயையும் சுத்திசெய்ய நலம்.

எண்ணை சுத்தி.

எவ்விதமாகிய யெண்ணைகளையும் ஜலத்தில் விட்டு நாலுநாழிகை சென்றபின் அதையிருத்துக்கொள்ளவும் சுத்தியாம் அவ்விதயெண்ணையையெந்தமருந்திர்க்கும் சேர்த்த பொழுதும் நன்மையாம்.

நாபி சுத்தி.

நாபியைவேணதெடுத்து யிருத்தியிலேச்சாற்றில் ஊரவைத்து மருநாளெடுத்து அந்ததிப்பியையரைத்து அந்த விழுதுக்குள் நாபியைவைத்து அதன்மேல் துணிசுற்றில் அடுப்பின்கும்பியிற் சொரிகிவைத்து ஒருநாழிகை சென்றபின் யெடுத்து சிந்தல் கியாழம் வைத்து அதில் டோளாவாந்திரங்கட்டி யெரித்து யெடுத்து யெருக்கன் பாலிலே கொஞ்சநேரம் வைத்து யெடுத்து கோமயத்திற் கழுவி யெடுத்து பல மருந்துகளிலும் சேர்க்க நல்லசுத்தியாம்.

சீனச்சுத்தி.

சீனமென்ற படிகாரத்தை பசும்பாலினிற் போட்டு மூன்றுஜாமம் ஊரவைத்து யெடுத்து பல மருந்துகளிலும் சேர்க்க நல்ல சுத்தியாம் அல்லது படிகாரத்தை படை நெருப்பின்மேல் வைத்து பொரித்துக்கொண்டாலும் சுத்தியாம்.

வெண்காரம் சுத்தி.

வெண்காரத்தை பொருத்திட்டாலும் சரி அல்லது

காடியிலாவது பழச்சாற்றிலாவது அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து யெடுத்துக்கொள்ளவும் நல்ல சுத்தியாம்.

கெருடப்பச்சை சுத்தி.

கெருடப்பச்சை யென்பதை பயர்போல தூளாகச் செய்து கிளிகட்டி சற்றுழைசாற்றில் மூன்று நாழிகை ஊர வைத்தெடுக்கவும் அல்லது யிந்த கெருடப் பச்சையை ஷகாற்றில் மூன்று நாழிகை யெரித்தெடுத்துக் கொண்டாலும் நல்ல சுத்தியாம்.

படிகாரச் சுத்தி.

படி காரத்தை யெருமைச்சாணியில் கிளி கட்டி வைத்தெடுக்க சுத்தியாம் அல்லது அப்படி காரத்தை சிருநீரில் மூன்று நாள் ஊர வைத்தெடுக்க சுத்தியாம் பிரகு அதை யெந்த மருந்திற் சேர்த்தாலும் நல்ல சுத்தியாம்.

சாத்திரபேதி சுத்தி

சாத்திரபேதி யென்பதை வேண்டியமட்டும் கொண்டுவந்து நாரத்தங்காய் ரசத்தில் ஒருநாள் ஊர வைத்தெடுத்துக்கொண்டு யெந்த மருந்திர்க்கு சேர்த்த போதிலும் அது நல்ல சுத்தியாம்.

அஞ்சனக்கல் சுத்தி.

அஞ்சனக்கல் யென்பதை புளியாரைக்கீரை சாற்றில் ஒருநாள் முழுதிலும் ஊரவைத்து யெடுத்து யெந்த மருந்தில் சேர்த்தபோதிலும் நல்ல சுத்தியாம் அஞ்சனக் கல் யென்பது அருபத்திஞலு பாஷானத்திற் சேர்ந்ததெனக்கொள்க.

காந்தக்கல் சுத்தி.

காந்தத்தை பழச்சாற்றில் அல்லது காடி ஜலத்தி லாவது ஏதொன்றில் கொதிப்பித்து யெடுத்துக்கொண்ட தின்பின் சாணிநீரினில் யேழுதிரம் காச்சித்து வைக்க சுத்தியாம் பிறகு பெந்த மருந்தில் சேர்த்த போதும் நன்மைதரும்.

கல்நார் சுத்தி.

கல்நாரியை கழுதை மூத்திரத்தில் மூன்று நாழி கை ஊரவைத்தெடுத்துக்கழுவி அதை பலமருந்து களுக் கும் சேர்க்கவும் நல்லசுத்தியாம்.

மடல்துதித்தசுத்தி.

மடல் துத்தம் வேணதை கொண்டுவந்து பாலி லாவது அல்லது தயிரிலாவது அல்லது கற்றாழை சாற் றிலாவது ஒருநாள் ஊரவைத் தெடுத்துக்கொண்டு பல வித மருந்துகளுக்கும் சேர்க்கவும்.

பால்துத்தச்சுத்தி.

பால் துத்தம் கிளிக்கட்டி சிருவர் மூத்திரத்தில் ஒருவாரம் யேழுநாள் ஊரவைத்தெடுத்து பல மருந்துக ளுக்கு உபயோகிக்கவும்.

துருசுசுத்தி.

துருசைதயிரிலரைத்து அதைதட்டிகாயவைத்துஒட்டி விட்டு பிரட்டி உலர்த்தியபின் மருபடியும் அதைதயிரில் ஒருஜாமம் ஊரவைத்தெடுத்துக்கொண்டு அதையெவ்வித மருந்துகளுடன் சேர்க்கவும்.

பச்சை துருசு சுத்தி.

பச்சை துருசை பசுங்கோமியத்திலிட்டு யெரிக்கவும் அதை நன்றாய் கழுவி காயவைத்து யெடுத்துபலமருந்துகளுக்கு உபயோகிக்கவும்.

கல்மத சுத்தி.

கல்மதம் வேணதைகொண்டுவந்து சிறுவர்கள் மூத்திரத்தில் ஒருநாள் ஊரவைத்து யெடுத்து கழிவிவிட்டு பலமருந்துகளுக்கும் உபயோகப்படுத்தவும்.

அரிதாரச்சுத்தி.

அரிதாரத்தை யீணுதகிடாரி சாணத்தில்மூன்று நாள் ஊரவைத்து யெடுததுக்கழுவி உலர்த்தி பலமருந்துகளிலும் சேர்க்கவும் அவ்வரிதாரத்துக்கு தாளகமென்றும் தாராமென்றும்பெயராம்.

முடிதாரச்சுத்தி.

முடிதாரம் யென்பதை கொண்டுவந்து பனங்கள்ளினில் கிளிக்கட்டிவைத்து யெரித்து யெடுக்க சுத்தியாம் யிம்முடிதாரத்தை ஒருவரும் யின்னதென்றறியார்கள்.

பவழப்புத்து சுத்தி.

பவழப்புத்து சுத்தியாவது பவழப்புத்தை கொண்டுவந்துமோரினிற் கிளிகட்டிவைத்து நாலுநாழிகைபரியந்தம் யெரித்து யெடுத்து அதைபலமருந்துகளுக்கு சேர்க்கவும்பவழப்புத்தென்பதை வாதிகளும் வயித்தியர்களும் பார்த்தரியார்.

மிருதார்சிங் சுத்தி

மிருதார்சிங்கிபைக் கொண்டுவந்து வெள்ளாட்டுநீரில்ஒருநாழிகை கொதிக்கவைத்தெடுத்திட நல்ல சுத்தியமா

ம் அதைப்பாபலமருந்துகளில் சேர்க்கவும் அம்மிருதார்சிங்கில் வங்க மெடுப்பதுவுமுண்டு.

மனோசிலைசுத்தி

மனோசிலையை காடிநீரில் கிழிகட்டிவைத்திருந்து அதையெடுத்து வெள்ளாட்டு நீரில் டோலாந்திரங்கட்டியெரித்திட்டெடுக்கவும் அதுநல்லசுத்தியாம்.

அயச்சுத்தி.

இரும்பாகிய அயப்பொடியென்பதை ஒரு நாள்யெலுமிச்சம் பழரசத்திலூரவைத்து யெடுத்து மருநாள்யெள்ளெண்ணெயில் கலந்து ஊரவைத்தெடுத்து மருபடியும் யிரும்புயேனங்கொண்டு அதை வருத்து அதை காடிவிட்டுக்கழுவி அப்பால் வென்பட்டைக்கொண்டுவந்து ஈரிக்கியாழம்வைத்து அதிற்போட்டு யெரித்து காடிநீரிற் கழுவியெடுத்து பலமருந்துகளுக்கும் சேர்க்கவும் நல்ல சுத்தியாம்.

அயத்தொட்டி சுத்தி

அயத்தொட்டியை பசும் பாலில் நாலு ஜாமம் ஊறவைத்து அதன்பின் தேனிலும் நெய்யிலும் ஒவ்வொன்றுக்கு யெட்டுநாள் விழுக்காடு ஊரவைத்தெடுத்து யெவ்வித முரைப் பாகங்களுக்கும் உபயோகிக்கலாம்நல்லசுத்தி.

மருந்து வகுப்பு.

முலைப் பால் சுரக்க.

எவ்வித ஸ்ரீகளாவது தான்பெற்ற சிசுவுக்கு பாலில்லாவரட்டு மார்பாயிருந்தால் அவளுக்கு பால் சுரப்பதர்க்கு அவாள் தலைப்பேன்களில் சுமார் பத்துபேனைப்பிடித்து

ஒரு வெற்றிலையில் மடித்து சுருட்டி அவாளுக்குத் தெரிய வொட்டாமல் வாயில் கொடுத்து மென்று தின்றுவிடச்செய்யும் யிப்படி மூன்று நாள் கொண்டுவரவும்இதைத் தின்ற ஆடவர்களுக்கு அதிக மதுரமான சோனையருவி போல் பால் சுரக்கும் யிதர்க்கு பத்தியமில்லை

வாததேகத்திற்கு பேதி.

யாதாமொருவர்க்கு சூட்டின்பேரில் வாய்வினுல்வபர்பிகிந்தக்கொண்டு பலபந்தமாய் பெவ்வித விரோசனமருந்து தின்றபோதிலும் பேதியாகாமற் போய்விடில் ஒருகெச்சகாயளவு பழய புளியில் அதர்க்குச் சமன் கொடிக்கள்ளிப் பால் அதில் விட்டுப்பிசைந்து சுண்டக்காயளவுகாலையில்சாப்பிடவும் அப்பொழுது நன்ருய் பேதியாதும் அதனுல் வாதமனைத்தும் சள்ளும் பல வியாதிகளுந் தீரும்.

நெறி குரல்மாரி தொனியுண்டாக.

ஒருவர்க்கு சீதளத்தினுல் தொண்டைகம்பி நெறிகுரல் அதாவது கீச்சுக்குரலாய் பேசுவாளுதில் அதர்க்குவெள்ளுப்புண்ணுக்கை யிராத்திரிக்குஅடுப்பின் கும்பியில்நூந்தி வெதுப்பி அதைவாயிலிட்டுமென்றுகுதப்பி அக்காரத்தை விழுங்கிடவும் காலையில் நன்ருப்ப் பழயபடியேபேசுவான் அப்படி ஒரு வேளை செய்யவும் போதும்.

வேறு முறை.

சுக்கு கடுக்காய் திப்பிலி வாலுவை யரிசியிந்த நான்கையும் யிளவருவலாக வருத்து யிடித்து ஒருமண்டலம்

நாற்பது நாள் சாப்பிட்டுவரவும் கண்டமானது உடைந்து நல்ல தொனியுடன் பாடக்கொடுக்கும்.

குரல் மாரியது குணப்பட.

ஆடாதோடை திப்பிலி கோஷ்டம் சுக்கு கடுக்காய் இவ்வைந்தையும் யிளவருவாய்வருத்து யிடித்து சூரணம்செய்து அதில்வெருகடி பிரமாணம் தேனில் குழைத்து சாப்பிடவும் யிப்படி நாற்பதுநா ளுண்டுவர யெவ்வித பன்னிசை ராகங்களையும் பாடக் கண்டமுடைந்து நற்றொனியை யுண்டாக்கும்.

சாராயக்குடி போனையகல.

பூச்சடாசெம்பென்பது பூநாகம் அதுவே நாக்குப்பூச்சி அவைகளைக் கொண்டுவந்து மோரிற்போட்டு அதன் வயற்றி லுள்ள மண்ணையெல்லாம் கக்கினபிறகு அவைகளை பட்டசாராயத்தில மூன்றுநாள் ஊரவைத்துப்பார்த்தால் யாவும் பாகுபோல் கரைந்திருக்கும் அதன் பின் மருபடியும் கொஞ்சம் சாராயம் அதில்விட்டுக் கலக்கி உட்கொள்ளச்செய்திடில் அவாள் குடித்தவுடனே அதிக வாந்தியாய் அவஸ்த்தைப்படுவதில் தாங்கள் மருபடியும் அதை ஒரு போதும் அறுந்தார்கள்.

கூழுண்ணும் பேதி

ஏழைகள் உண்ணும் பேதியாவது ஆமணக்கன்முத்தின் பருப்பு கொட்டாங்கச்சி சுட்டகரி சுத்திசெய்த நேர்வாளப்பருப்புயிம்மூன்றுஞ் சமனிடையாயெடுத்துகல்வத்திட்டு பசும்பால்விட்டு யிரண்டுசாம மரைத்து மெழுகுபதத்தில் வழிதெடுத்து வைத்துக்கொண்டு அதில் தேகத்துக்கு தக்கினபடிசுண்டாக்காயளவு உள்ளுக்கு கூழிலாவ

து அல்லதுயெவ்வித வஸ்துக்களிலாவது கொடுக்கவும், பேதியாகும் அதர்க்குப்பத்தியம் கூழ் மோர் கிச்சிலிக்காய் வூருக்காயிபிடவும்.

சாதாரண பேதி.

ஆமணக்கு முத்தின்பருப்பு, காசிகட்டி சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு யிம்மூன்று தினுசையும் சமனுகசேர்த்து கல்வத்திலிட்டு பசும்பால்விட்சு யிரண்டு சாமமரைத்து மெழுகு பதத்தில் எடுத்துவைத்துக்கொண்டு அதில் சுண்டக்காயளவுதேகத்துக்குததக்கினபடி அனுபானவிஷயத்திற் கொடுக்கவும் மோர் சாதம் அல்லது மிளகு நீர்முதலிய தெதுவாகிலும் உண்ண நன்மையாகும்.

அண்ணுடம் செய்தளிக்கும்பேதி.

மனிதர்களுக்கு அண்ணுடமளிக்கும்பேதியாவதுகடுக்காய் பிஞ்சியில் ஓடகற்றியுள்ளசுத்திசெய்யாதவாளம்அல்லது சுத்தி செய்தவாளம் யிரண்டிலொன்றை சமனுய்ச்சேர்த்து பசும்பால் அல்லது முலைப்பால்விட்டு இரண்டு ஜாமம் யரைக்கவும் அரைத்தானவுடன் அதை வழித்தெடுத்து கோப்பையில் வைத்துக்கொண்டு யெவ்வித அனுபானத்திலேனும்சுண்டக்காயளவு தேகக்கூரரிந்து சாப்பிட்டு அதிக ஙன்ருய் பேதியாகும் யிச்சாபத்தியம் யிராத்திரிக்கி சுக்குரரிக்கிபோட்டு முளகுசேர்த்து கியாழமிட்டு வடித்திருத்துக்கொடுக்கவும்.

அனுபான லேகியம்.

அனுபரன லேகியமாவது கருப்பு மணக்கத்தை அரிசியை யரைத்து தெள்ளியமாவு அரைபடியில் வெ

ள்ளை கற்கண்டு பதினைந்து பலம் அதிற் பொடித்துப்போ ட்டு சாரித்து அதில்நெய் பலம் அஞ்சிவிட்டு நன்ருய்கல க்கப் பிசைந்து அதை லேகியமாகச் செய்துவைத்துக்கொ ண்டுஅதிற்கொட்டைபாக்களவு யெடுத்து யெவ்வித மருந் து அல்லது பஸ்பம் செந்தூரமுதலியதை வைத்துண்ண அனுபானமாக விருக்கும் யிதில் தேன்கூட விட்டாலும் விடலாம் குற்றமில்லை.

உக்ரவீரச் செந்தூரம்.

உக்ரவீரச் செந்தூர முறையாவது பூநாகம் அதாவ து நாக்குபூச்சி மண்கக்கியதற்குச் சமனிடையாய் படிகா ரத்தைச்சேர்த்தரைத்துயெடுக்கவும் செந்தூரமாகவேயிரு க்கும் அதில் ஒரு கடலையளவு யெடுத்து வெண்ணை அல் லது நெய் தேன முதலிய வேரெவ்வித அனுபானங்களிலா வது காலைமாலை யிரண்டுவேளையும் மூன்று அல்லது அஞ் சி எழு நாள் உள்ளுக்கேற்றிவரவும் பெறும்பாடு இரத் தக்காசம் மேகம் மேகவெட்டை உட்காச்சல் வுஷ்ணவா ய்வு மதுமேகம் தந்திமேகம் வெகுமூர்த்திரம் நாவுபுரட்ட ல் நாவுவரட்டல் நீர்க்கட்டு நெஞ்சரிவு முதலிய சகலபிணி களும் விரையிற் செல்லும் யிச்சாபத்தியம் வைக்கவும்.

காமாலைக்கு வேர்பிடுங்க.

காலைமாலைக்கு வேர்பிடுங்குவ தெவ்வானெனில் எருக் கன் செட்டியைத் திங்கட்கிழமைதினம் காலையில் சூரிய உதையத்தில் செடியண்டைசுத்திசெய்து அங்கு பச்சரிசி தேங்காய் பழம் வெல்லமிவைகளை செடி அருகாமை வை த்து நைவேத்தியஞ் செய்து மஞ்சள் நூல் காப்பு கட்டி

மற்றுநாள் செவ்வாய்க்கிழமை தினம் காலையில் அதின் உச்சிவேர் அறுமற்பிடுங்கி அவ்வேரை யெரித்து விட காமாலை தீரும் அல்லது அவ்வேரை தண்ணீரிற்போட வாட்காமாலை தீரும் அவ்வேறை கள்ளிச்செடி மேற்போட ஊதுகாமாலை தீரும் யிதன்றி அவ்வேரையறைத்து அதில் வெள்ளாட்டுப்பிச்சி ஒவ்வொன்றுவைத்து அதிகாலையில் உண்ணுக்கிற்படாமல் விழுங்கிடவும் யிரண்டுவேளையில் மூன்று காமாலை நீங்கும் இதற்கு பத்தியம்யாதொன்றுமில்லை.

வைசூரிசரம் பயித்தியந்தீர.

வைசூரியைச்சார்ந்த சரக்குளிர் பயித்தியம் புலம்பல் ஓதுங்குவ தெப்படி யென்றால் வெள்ளைப்பூண்டுவெண்காயமும்சேர்த்தரைத்து ஒரு துண்டு சீலையிற்றடவி உள்ளங்கால்களில் பாஸ்டவசாய்கட்டி வைத்திருக்கவும் வைசூரியைச்சேர்ந்து சரம் குளிர் கொதிப்பு பயித்தியம் புலம்பல் யாவுந்தீரும் அம்மையும்கிளம்பாது அடங்கிவிடும்.

புத்திவிர்த்திக்கு.

புத்திவிர்த்திக்கு வேண்டுமெனில் சுக்குதிப்பிலிமிளகும் வெண்சீரகம்மஞ்சள் மரமஞ்சள் வசம்புகோஷ்டம் சயித்தலவணம் அதிமதுரம் இவைகளை சமனாய் சேர்த்துயிடித்துப்பொடித்து சூரணஞ்செய்து அதில்வெருகடிவீதம் காலை மாலையில வெண்ணெயில் ஒரு மண்டலமுண்டுவரவும் புத்திவிர்த்தியாய் அதிகரித்து புலவனுவான்.

பாம்புகடித்திரப்பவர் பிழைக்க.

எவ்வித பாம்பு கடித்திரப்பவர் பிழைப்ப தெவ்வாறெனல் சீரிப்பிள்ளை உடும்பு மூஞ்சுறு கெருடன்சாரை

பாம்பு யிவ்வைந்து ஜெந்துக்களின் யீரல்பிச்சுகளையெடுத்து உலர்த்தி சமனுய்சேர்த்து கலவத்தில் நாலுஜாமம்நெகிழவரைத்து உருண்டைசெய்து யெந்தபாம்பு சடித்திறந்தபோதிலும் உடனே அவாள் கைகால் நகங்களில் கீரிகொஞ்சமருந்தை முலைப்பாலிலிழைத்து கீரிணவிடத்தில் வைத்து நன்றாயழுத்தி குளிர்ந்தஜலம் மூன்றுகுடம் சிரசில்விட்டதின்பின் துப்பட்டியை ஈனத்து பாம்புகடித்தவனை மூடி படுக்கவைக்கவும் அவன் இரண்டு கடிகைக்குமேல் ஒருபக்கம் அசைந்து விஷமீண்டு உயிர்தரித்தெழுந்திருப்பான் உடனே பச்சரிசி பச்சைப்பயர் ஜாகா காச்சிக் கொடுக்கவும்.

நீரில்விழுந் திரப்பவர் பிழைக்க.

ஜலத்தில் விழுந்திரப்பவர் பிழைப்ப தெவ்வாறெனில் உடனே அவ்வித பிரேதத்தின் மார்பு உச்சி நாவுமுதலியதிற் கிறி மேற்சொல்லிய பாம்பு கடியின் அவிழ்தத்தை கொஞ்சமெடுத்து அந்தந்தயிடங்களில் வைத்தழுத்தியிருக்க அதனை அவாள் உடல்வாண்டு நீர்கக்கி அருகிலிருக்கும் உறவின முறையார் சந்தோஷிக்கும்படி உயிர் பிடமுத் தெழுந்திருப்பார் அதிலும் வெகுநாள்வாழ்ந்திருந்தவீற்றிருக்கசமசய்யும் அனுபவமான மறந்தென்றறிக.

வெட்டுகாயத்திற்கு.

வெட்டுகாயமாறவ தெவ்வாறெனில் இரசகர்ப்பூரம் பேன்கொட்டையேலரிசி தேங்காய்பத்தை இவைகளை யிடித்து தூள்செய்துநல்லெண்ணெயிற்கூட்டி அறைத்து அதை செப்புத்திமிளில் வழித்தெடுத்து வெய்யலில் காயவைத்து பனித்தரை அடித்தல்வெட்டுதல் குத்துதல் முத

வியாபங்களில் தடவிக்கொண்டு வரவும் காயரணங்கள் உடனே ஆறிவிடும் அந்தவடுவுகளும் மாறிவிடும்.

அர்த்தநாரீஸ்வரர் குளிகை.

அர்த்தநாரீஸ்வரர் குளிகை யாதென்ன வெனில் தாளகம் லிங்கம் ரசம் கடுகுரோகணி அதிமதுரம் சுக்கு திப்பிலி மிளகு சிக்கற்கொடி யிவையினக்கும் சமனாகச் சேர்த்து பச்சைதிராக்ஷப்பழரசத்தில் நெகிழவரைத்து ஒரே மாத்திரையாய் திரட்டி யுருட்டி அதை நிழலிலுலர்த்தியபின் அக்குளிகையை சித்தற்றண்டின் சாற்றிலுரைத்தி ஒரு கண்ணிற் கலிக்கமிடவும் அப்பக்கமுள்ள சுரமா மாதை நீங்கிவிடும் அவ்வாறு மற்றொரு கண்ணிலும் கலிக்கமிட மறுபக்கசுரமும் நின்றுவிடும் அல்லது இருபக்கக் கண்களிலும் யேககாலத்தில் கலிக்கமிட இருபக்கத்துள்ள சுரங்களும் தடையன்றி நின்றுவிடும் பத்தியம் மூன்று நாள் கஞ்சியும் சாதமுமாக கொடுக்கவேண்டும் முன் மருந்துகளை சுத்திசெய்துக் கூட்டவும்.

மேற்படி குளிகைக்கு கியாழம்

மேற்படி குளிகைக்கு கியாழம் யாதெனில் கோரைக்கிழங்கு பேய்ப்புடல் சுக்கு சித்தற்றண்டு பற்பாடகம் வகைக்கு விராகனிடை இரண்டு ஆக யாவுஞ்சேர்த்திடித்துக்கியாழமிட்டு அதில் உச்சிக்கரண்டி தேன்விட்டு சேர்த்துக் குடித்திடவும் மேற்கூறிய சுரங்கள் தீரும் தேகவழலைப் மாற்றும்.

கழற்சிக்காய் சூரணம்.

கழற்சிக்காய் சூரணம் செய்வது எவ்வாறெனில் கழற்சிக்காயென்றது கெச்சக்காய் வேண்டியதை ஓடு

களைநீக்கி உள்ளிருக்கும் பருப்புகளை யிடித்துதூளாக்கிக் கல்வத்திலிட்டு யிஞ்சிச்சாற்றில் நெகிழவரைத்து பில்லை செய்து பத்து யெருவிற் புடமிட சுன்னமாம் அச்சுன்னத்தில் தம்பிடியளவு தேனிலாவது அல்லதுவெண்ணை யிலாவது குழைத்துண்ணவும் விரைவாதமென்பதாலும் இப்படி ஐந்து ஏழுநாள் அருந்தவும் யிச்சாபத்தியமாக யிருக்கவும்.

கருடக்கல் பஸ்பம்.

கருடக்கல்பஸ்பம் செய்வதெவ்வாரெனில் வாழக் கட்டையைதுளைத்து அதற்குள் கருடக் கல்லுகளைப் போட்டடைத்து அத்தூளால் வாயைமூடி சீலைமண் செய்துகெஜப்புடத்தில் குழிவெட்டிவைத்திடவும் அது நீரிப் பஸ்பமாய்விடும் அதுவுமில்லாவிட்டால் கோரைக் கிழங்கையரைத்து கருடகல்லுகளுக்கு கவசம்செய்து குக்கிடப் புடமிடவும் நீரிப்பஸ்பமாம் அந்த பஸ்பத்தில் குண்றியிடை தேன் நெய் வெண்ணை இந்தமூன்று அனுபானத்தில் எந்த அனுபானத்திலாவது காலைமாலை யிருவேளை மூன்றுநாள் உட்கொள்ள தேகவழல் வெட்டை பித்தசுரம் யின்னுஞ்சிலநோய்கள் தீரும் இச்சாபத்தியமாக யிருக்கவும் மெத்த நன்மையைத்தரும்.

கருங்கோழி லேகியம்.

கருங்கோழி லேகியம் செய்வ தெப்படி யெனில் பரங்கிப்பட்டை பலம் மூன்று அசமதாகம் திப்பிலி மூலம் சுக்குதிப்பிலி மிளகு செவ்வியம் தனியாதேசாவரம் வாய்விளங்கம் குரோசானி வோமப் கடுகுரோ

கணி சித்தாத்தை இந்துப்பு கல்லுப்பு பொட்டிலுப்பு விளையலுப்பு யாவும் வகைக்கு விராகனிடை ஐந்து ஜாதிக்காய் ஜாபத்திரி கிராம்புவகைக்கு விராகனிடை யிரண்டு இவை அனைத்தையு மிடித்து வைத்துக்கொண்டு கருங்கோழியொன்று கொண்டு வந்து அதின் குடல் கால் தலைமயிர் இவைகளைப்போக்கி அதின் வயற்றில் அம்மருந்துகளை யடைத்து அதிற் பாதிஜலம் விட்டு வேகவைத்து அப்பானை வாயிற் கோணியை யேடு கட்டி அதின்மேற் கோழியைவைத்து மேல்சட்டி மூடி சீலைசெய்து ஒரு ஜாதிவிரகால் யிரண்டுஜாமம் யெரித்து ஆறியபின்பு மேற்படி கோழியையெடுத்து அதிலுள்ள யெலும்புகளைப்போக்கி கரியையெடுத்து அரிந்து அதை நிழலிலுலர்த்தி அசமதாகம் பலம் ஒன்று சேர்த்திடித்து நன்றாய் சூரணஞ்செய்து அதில் யெட்டு வராகனிடை சர்க்கரை சேர்த்தரைத்து ஒரு மண்டலம் வெருகடிவிதம் காலைமாலை யிருவேளையும் உண்டுவரவும் யிதிற்றீரும் வியாதி சகலவாய்வு முதல் மேகச்சூலைக் கட்டுமேகக்கடுப்பு முதல்யாவும் தீரும்இதற்கு தக்கடும் பத்தியம் வைக்கவும் தேகம் யிருகும் சகல வலுவுகளுண்டாகும் மகா ஆண்மையைக்கொடுக்கும் மேற்படி கருங்கோழியை பரிக்ஷிப்பது யெவ்வாறெனில் அக்கோழியின் மூக்குநெகம்யாவும் கருத்திருப்பதன்றியும் அதின்சரீரத்தில் ஒரு ஊசியை குத்துவோமாயின் அந்த ஊசியானது சதையில் இரங்கினமட்டும் சதையோடு சதையாய் கரைந்துவிடும் அவ்வூசியை பிடுங்குங்கால் பாதி ஊசிதான் கையோடுவரும் அவ்வித கோழியைப்பார்த்து வாங்கவும் அவ்வித கருங்கோழி மகம்மதியர் வீட்டில்தான் கிடைக்கும்.

மேகநாதன் குளிகை.

மேகநாதன் குளிகை யாவதென்னவெனின் அவை.

ஜாதிலிங்கம் விராகனிடை	க	பெருங்காயம் விராக	க
வெண்காரம் ,,	க	குரோசாணி ஓமம்	க
சுக்கு ,,	க	காட்டாமணக்கு வித்	க
மிளகு ,,	க	வசப்பு ,,	க
திப்பிலி ,,	க	இந்துப்பு ,,	க
கடுக்காய் ,,	க	வாய்விளங்கம் ,,	க
தானிக்காய் ,,	க	சுத்திசெய்தவாளம்	க
நெல்லிமுள்ளி ,,	க	கடுகுரோகணி ,,	க

இப்பதினாரு தினுசுகளையும் மேற்படி நிறுத்தெடுத்து யாவும் யிடித்துப் பொடிசெய்துவஸ்திர காயஞ்செய்து கல்வத்திற்போட்டு யெலுமிச்சம் பழசாற்றில் இரண்டு ஜாமமரைத்து கடலைப்பிரமாணம் குளிகைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு ஒருகுளிகையை நல்ல வெல்லத்திலிட சகலநோய்களுந்தீரும்.

கொச்சிச் சாற்றிலிட பஞ்சகுன்மங்களாலும் இவைகளுக்குப் பத்தியம் இரவில் பாலும், சாதமுன்னவும் சீரகக்கியாழத்திலிட சேத்துமக்குணங்களோடும் பால் கஞ்சித்தண்ணியில் ஐந்து குளிகையிடவும் ஒருவாரம்பாலுசாதமுன்னவும், மாதளம்பழச்சாற்றிலிட தலைசுற்றும் பயித்தியந்தீரும் பத்தியம் தயிரும், சாதமுன்னவும், நெல்லிப்பருப்புச்சாற்றிலிட உள்ளங்கால் கை கண் உச்சந்தலை ஆசனயெரிவு மந்தாக்கினியாவுந் தீரும் பத்தியம் மோருஞ் சாதமுன்னவும்.

ஒரிலை தாமரைச்சாற்றிலிட வாய்வு அடிவயற்று தூக்கல் வாட்குன்மம் கைகால் வலித்தல் பிடரிநோகு

தல் வயர்வெண்ணுஊரயால் போகுதல் யிவை யாவுந்திரு
ம் மோரும் சாதமுண்ணவும்.

முருங்கிலேச்சாற்றிலிட சமூத்துநோய் பயித்திய கு
ன்மம் நடைநடக்கமுடியாமை உந்தியிலிருந்து கழுத்தள
வு யெரிவதிரும் பாலும் சாதமுண்ணவும்.

முருங்கைவேர்பட்டைச்சாற்றிலிட வாத உபத்தி
ரவச்சர்வங்கம் புாளும் வாய்வு உப்புமேற் கவனம் கரிவு
ண்ணல் அரோசகம் தீரும் தயிரும சாதமுண்ணவும்.

வெண்ணீரிலிட சேத்துமகுன்மம் தீபனமில்லாமை
வயர்பிருந்த உப்பிஸம் தீரும் தயிர் சாதமுண்ணவும் ச
ண்பகபாட்பட்டைச் சாற்றிலிட சேர்த்திகுன்மம்நீர்கடுப்
பு வாந்தி ஒக்காளம் தீரும் நொய்யரிசி கஞ்சி யுண்ணவும்
வெள்ளாட்டுக் கோமியத்திலிட ஆமலப்பித்தம் பயித்திய
ம் நெஞ்சுப்பியெரிதல் தீரும் பால் நொய்யரிசிகஞ்சி பா
கையிலேசாற்றிட கைகாலெரிவு வாதந்திரும் தயிர்சாதங்
கொடுக்கவும்.

சகாதேவி சாற்றிலிட பெண்களிடும் மருந்தை யெடு
க்கும் நுரை நுரையாய் பேதியாகுதல் வாந்தி யெடுக்குதல்
வாயில் உமிழ்நீர் ஒழுகுதல் பிராணனே வாட்டும் நோய்தீ
ரும் பாலுஞ்சோருண்ணவும்.

சுக்குத்தூள் வெந்நீரிலிட நேரந்தப்பி சாதமுண்ணை
ல் தண்ணீரதிகம் உபயோகித்தல் தலைபாரமாயிருக்கல் கு
ன்மமுதற்றிரும்.

எருக்கன் பழுப்புச்சாற்றிலிட பஞ்சமலங்களின்
தோஷம் வாய்நீர்சட்டியாயுமிழ்தல் அது உப்பாகக்கல்லு
போலிருத்தல் தீரும் ஆட்டுப்பால் சாதமுண்ணவும், கட்

இக்கொடிசாற்றில்விடக்கிரிகிகல் நோய்தீரும் பத்தியம்நொய்யரிசிகஞ்சி.

கற்றாழைசாற்றில்விட குட்டம்தீரும் பத்தியம் பாலும்சாதமுமன்னவும் பிருமண்டலம் உண்ண தண்மை திப்பிலி அளிவுட அட்டவகை பீனிசம் வாயில் நீர் வடிதல் உமிநீர் விறைவில் வருமைதீரும்பத்தியம் நொய்யரிசிகஞ்சி காடியில மூன்று குளிகைவிட கொன்னை நாக்குதிமிராயிருக்குதல் அரோகசந்தீரும் தயிருஞ்சோருன்னவும் இஞ்சிச்சாற்றில மூன்று குளிகைவிட காசமுதல் தீருங்க கெஞ்சி கொடுக்கவும்.

உருத்திராக்ஷயிலை சாற்றில் ஒரு குளிகைவிட மூளைக்கீரும் பத்தியம் நொய்கஞ்சிகொடுக்கவும். புளியிலை சாற்றில்விட வயர்மகோதரம்போல் கல்லைப்போல்வீங்கி படுக்க வொட்டாமல் இருப்பதை தீர்க்கும்பத்தியம் பாலும் சோருமிடவும்.

இக்குளிகையை யெக்தநோய்களுக்கும் ஒருவாரம் தப்பாதருந்திட சகல நோய்களும் விரைவிற்றீரும் பத்தியம் சரியாயிருக்கவும்

வெள்ளாட்டு லேகியம்

வெள்ளாட்டு லேகியம் செய்வது. வெல்லாவெனில் தனக்கு வேண்டிய வெள்ளாட்டிபச்சியை வாங்கிவந்து ஓரேணத்திற் போட்டு அதற்குத் தக்கின ஜெலம் விட்டுச் அவித்து அதிலுள்ள ஓம்புநரம்புசல்லவையகற்றியிறைச்சியை கடைந்து தயிர் போலாக்கி அதிற்சேருமசரக்குகள்.

கருஞ்சீரகம் பலம்	2	சுக்கு பலம்	4
லவங்கம் ,,	2	தனியாகுத்தரிசி	5

ஏலரிசி	பலம்	2	பொரங்கிசகஸைபலம்		5
வெள்ளைமிளகு	,,	2	சிறுநாகப்பூ	,,	5
சதகுப்பை	,,	2	சோம்பு	,,	5
கோஷ்ட்டம்	,,	2	வெட்பாலையரிசி	,,	5
மதுரம்	,,	2	திப்பிலி	,,	5
அலசவிரை	,,	2	கசகசா	,,	5
நன்னாரிசமூலம்	,,	2	வால்மிளகு	,,	5

ஆகிய யிப்பதினெட்டு தினுசுகளையும் யிடித்துப் பொடித்து சூரணஞ்செய்து அதிற்போட்டுப் பிசரி அடுப்பேற்றி யெரிக்க மெழுகுபதமாய் வருகையில்நெய் பத்து பலம் விட்டு கிளரி வருகையில் அதன் பின்பும் கொஞ்சம் நெய்விட்டு வெங்காயம்பலம் அஞ்சி அரித்துப்போட்டு வெந்தயம் சீரகம் வகைக்கு பலம் ஒன்று சேர்த்து யாவும் ஒன்றாய் தாளிதஞ்செய்து அதில் ஒருஎலுமிச்சம்பழமளவுகாலைமாலை இரண்டுவேளைகளிலும் ஒருவாரஞ்சாப்பிட்டு வரவும் அதிற்றீரும் வியாதிகிரந்தி சொரி புண்கள் மாறிவிடும் உடம்பு சுக்குவற்றலாய் வாடிவிடும் இரண்டுவாரம் உண்டு வருங்கால் கடபது வலுத்து வாதசரீரமாகி கனகம்போல மேனி மினுமினுப்பாய் தோற்றம் தாதுவைக் கட்டிவிடும் வெள்ளைமுதலிய பலநோய்கள் தீரும் மெத்த வலிவுண்டாகும் கடைசரக்குகளைத் தனித்தனியாய் வறுத்துக் கூட்டவும் யிச்சாபத்தியமாகயிருக்கவும்.

அன்னபேதி செந்தூரம்.

அன்னபேதி செந்தூரம் செய்யும் விதமெவ்வாறெனில் ஒரு தேனிச்சுச் சட்டியில் ஒருபணங்கு பிரண்டையை கணுக்களை நீக்கி நடு கண்டங்களைப் போட்டுப் பரப்